தீ.ம.மே.மா கருப்பொருள் (2017-2019): எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட கருப்பொருள் (2016-2020):

# திருச்சபை குடும்பங்களின் ஒன்றியம்


ஜனவரி துணை கருப்பொருள்: எதிர்நோக்கம்:

## இறையரசுக்கான கடவுளின் கொடை

அறிமுகம்: உண்மையில் ‘‘எதிர்நோக்கைத் தரும் கடவுள்’’ (உரோ 15:13). ‘‘ கடவுள் எதிர்நோக்கு உள்ளவராக இருக்கும் போது, எவரும் நம்பிக்கை இழக்கக் கூடாது. முன்னோக்கி செல்வதற்கு பலம் தருவது எதிர்நோக்கு. சவால்கள் நிறைந்த வாழ்வில் எதிர்ப்பார்ப்புடன் முன்னேறிச் செல்வதற்கு வலிமையைக் கொடுப்பது எதிர்நோக்கு. நாளைய தினத்தை காண்பதற்க்கான சலுகை’’. (பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மறையுரை, 6 நவம்பர் 2016).

ஆரம்பப்பாடல் (தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான பாடலைத் தேர்வுச் செய்யவும்).

## உரையாடல்



மேலே காணும் படத்தைக் குறித்து குடும்பத்தினர் கலந்தாலோசிக்கின்றனர்.

மகன் : அப்பா! ஏன் எல்லோரும் சிலுவையை தூக்கிக் கொண்டு செல்கின்றனர்?

அப்பா : ஆமாம், தூக்கிச் செல்ல ஒவ்வொருவருக்கும் ஓர் சிலுவை உண்டு.

மகன் : அப்பா, அந்த சிலுவை பாரமாக இருக்கும் போல் தெரிகிறது. நான் நினைக்கிறேன், அவர் பாரத்தைக் குறைக்க சிலுவையின் ஓர் பகுதியை வெட்டப் போகிறார்.

அம்மா : பாருங்கள்! அவர் அகன்ற பகுதியை அடைந்துள்ளார். சிலுவை கட்டையாக இருப்பதால், மறுபகுதியை எட்ட முடியவில்லை. மற்றவர்கள் தங்கள் சிலுவையைப் பாலமாக அமைத்துக் கடந்துச் செல்கின்றனர்.

அப்பா : சமயங்களில் நமது பிரச்சனைகள் பாரமாகதான் இருக்கும். கஷ்டங்களைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும். நமது அன்றாட வாழ்வில் சிறிய துயரங்களை நாம் சுமக்கும் போது, நாம் வலிமைப் பெற உதவுகிறது. முதிர்ச்சியடைகிறோம். கடவுளோடு நாம் கொண்டுள்ள உறவு ஆழமாகிறது.

அம்மா : ஆமாம்! பிள்ளைகளே, அப்பா செல்வது சரியே. கஷ்டங்கள் வரும்போது நானும் சலித்துக்கொள்வேன். என்னுடைய கஷ்டம் எனும் சிலுவையை துண்டித்துக் கொள்ள முற்படுவேன், படத்தில் காணும் மனிதரைப் போல், ஆனால் செபத்தில் நான் இறைவனோடு இணையும் போது, எனக்கு சக்தி கிடைகிறது. எனது பிரச்சனைகளு-க்கு தீர்வு பிறப்பதை உணர்கின்றேன். நல்ல வழியைக் காண கடவுள் எனக்கு எப்பொழுதும் உதவி செய்கிறார். இதற்காக இறைவனுக்கு நன்றி கடன் பட்டுள்ளேன்.

சிந்தனைக்கு

அருகில் உள்ளவருடன் கலந்து பேசவும். மீண்டும் மற்றவருடன் கலந்து பேசவும்.

- மேலேயுள்ள படம் மற்றும் அதனை ஒட்டி பேசப்பட்ட, கலந்துரையாடல் குறித்து உங்கள் உணர்வு மற்றும் கருத்தைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
- உங்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகளை / கஷ்டங்களை எவ்வாறு எதிர்க்கொள்கிறீர்கள் என்று பகிர்ந்துக் கொள்ளவும்.

## உணர்வு

வாசகம் : உரோ 5: 1-5

1. தூய ஆவியாரை நோக்கி செபியுங்கள்.

   (மனம் திறந்து இறை இயேசுவை சந்திக்கவும், அவரால் ஆட்கொள்ளப்பட்டு வல்லமைப்பெற)

2. வாசகப் பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும்.

   (ஓவியங்கள், படங்கள், காணொளி, நாடக வடிவம் போன்றவைகளைப் பயன்படுத்தலாம்…..)

3. இறைவார்த்தையில் நிலைத்து அமைதியாக இருக்கவும்.
4. எந்த வார்த்தைகள், வசனங்கள் அல்லது கருத்துக்கள் என் மனதைத் தொட்டது?
5. தூய ஆவியானவர் கூறும் செய்தி என்ன அல்லது எனக்கு கூறும் செய்தி என்ன?

## செயல்கள்

a) சிறிய குழுவில் பகிர்ந்துக் கொள்ளவும் (3-4 பேர்கள்) மேலேயுள்ள 4+5-ம் எண் கேள்விகள் குறித்து.

b) பெரிய குழுவில் 2 அல்லது 3 கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்ளவும்.

c) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் செய்யக்கூடிய ஓர் காரியத்தைத் தேர்வு செய்ய உதவ வேண்டும்.

d) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் தேர்வு செய்த காரியம் குறித்த விஷயங்களைக் சேகரிக்க உதவலாம். (மற்றவர்களுக்கு எதிர்நோக்கு அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். நடைமுறை படுத்தும் நாளை முடிவு செய்ய வேண்டும்).

e) செபிக்கும் நேரம் (தேர்வு செய்த காரியத்திற்காக செபிக்கவும்).

வழிநடத்துனரின் கவனத்திற்கு:

i) புத்தாக்க/ மாற்று வழி/ பங்கு கொள்ளும் வழியினைப் பயன்படுத்தலாம்.

ii) தலைப்பின் கருப்பொருள் மற்றும் உரையாடல் / உணர்வு பகுதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை மனதில் கொள்ளவும்.

iii) 4E (தடுத்தாட்க் கொள்ளப்பட்ட, வல்லமைப்பெற்ற, தெளிவுப்பெற்ற, மறைப்பரப்பு) ஆகியவற்றை நினைவிற்க் கொள்ளவும்.

iv) 3D (உரையாடல், உணர்வு, செயல்கள்) ஆகிய மூன்று பகுதிகளையும் பங்கெடுப்பாளர்களுக்கு அர்த்தமுள்ளதாக இருக்க விரிவாக ஆராயவும்).

இறுதிப்பாடல் (பொருத்தமான பாடலைத் தேர்வுச் செய்யவும்).

தீ.ம.மே.மா கருப்பொருள் (2017-2019): எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட கருப்பொருள் (2016-2020):

## திருச்சபை குடும்பங்களின் ஒன்றியம்

பிப்ரவரி துணை கருப்பொருள்: எதிர்நோக்கம்:

## மனிதத்தன்மையில் கடவுளின் கொடையை வரவேற்றல்

அறிமுகம்: ‘‘எதிர்நோக்கு கடவுளின் கொடையாகும். இக்கொடையைப் பெற முயற்சிக்க வேண்டும். நம் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்துக் கொள்ள, இக்கொடையை நம் உள்ளத்தில் பதிய வைக்கப்பட்டுள்ளது. எதிர்நோக்கு குணத்தை வளப்படுத்தும் போது நல்ல பலன் தரும். குறிப்பாக கடவுளிடம் நெருக்கம் மற்றும் இரக்கம்…..’’ (பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மறையுரை, 6 நவம்பர் 2016)

## உரையாடல்

‘‘கடவுள் தவறு செய்யமாட்டார் என்பது நிச்சயம் ஆனால் அவர் அற்புதங்கள் புரிவார்’’. இறை அற்புதத்தின் விளைவுதான் நான், நீங்களும் தான். இது நிக்கலஸ் ஜேம்ஸ் அவர்களின் அறிக்கை. ‘‘நிக்’’ விஜிசிக் என்ற இவர் பல லட்சம் பேரை கவர்ந்துள்ளார். பலருக்கு உந்துசக்தியாக விளங்கியுள்ளார். 10 வயது சிறுவனாக இருந்தபோது, தனது வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணிய இவரின் எதிர்நோக்குள்ள வார்த்தைகளை கேட்கின்றவற்கு வியப்பாகதான் இருக்கும்.

ஆஸ்திரேலியாவில் பிறந்த நிக் பல முகங்களைக் கொண்டவர். இவர் ஒரு தன்முனைப்பு பேச்சாளர், பட்டதாரி, எழுத்தாளார், கிறிஸ்துவ போதகர், கணவர், தந்தை இத்தனை முகங்கள் கொண்ட இவருக்கு கைகளும் கால்களும் இல்லை. உடல் வளர்ச்சி குன்றிய குறைபாடுடன் பிறந்தவர். ஓர் அரிய வகை நோய் இவருக்கு.

இவரின் பெற்றோர்கள் Dushka-வும் தாயார் Boris-சும் மகனின் நிலையைக் கண்டு மனம் துவலாமல் முன்நோக்கி செல்வதற்கு ஊக்கம் அளித்தனர். இவரின் விசுவாசமும் தன்னம்பிக்கையும் இவரை உச்சத்தில் நிறுத்தியது. ‘‘கடவுளின் திட்டம் என்ன என்று எனக்கு புரியவில்லை என்றாலும், கடவுள் என்னுடன் இல்லை என்று அர்த்தமாகாது’’. கொஞ்சமும் எதிர்பாராமல் பிறந்த தங்கள் ‘‘சிறப்பு குழந்தை’’ குறித்து துயரமும் அச்சமும் கொண்டனர். இக்குழந்தையை வளர்த்தெடுக்கும் சிந்தனை இவர்களின் விசுவாசத்தையும் பாதித்தது.

ஆனால் தங்களின் ‘‘சிறப்பு குழந்தை’’ பற்றிய எண்ணத்தை மாற்றிக் கொண்ட போது கேள்வி குறியாக இருந்த விசுவாசம் இவர்களுக்கு பலமானது. இறைவனின் அருளாலும் ஞானத்தாலும் இறை மகிமையாலும் தங்கள் குழந்தையை வளர்த்தார்கள். ‘‘உங்களுக்கு கால்கள் இல்லாமல் இருக்கலாம், ஆனால் உங்களால் என்ன செய்ய முடியும் அல்லது முடியாது என்பதை உங்கள் உடலின் குறைபாடு நிர்ணயம் செய்யக் கூடாது’’.

‘‘பயன் அற்றவன் பெற்றோருக்கு சுமை’’ என்று எண்ணிய காலம் முதல் அவரது பயணம் தொடங்கியது. மற்றவர்களை விட பலவற்றை அவரால் செய்ய முடிந்தது. நீச்சல், மீன் பிடித்தல், பணி விளையாட்டு, முக்குளிப்பு! 58 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த பயணத்தில் மூன்று மில்லியன் மைல்கள் கடந்துள்ளார். இப்பயணம் வழியாக வாழ்வை வெறுத்த பலருக்கு எதிர்நோக்கு அளித்துள்ளார்.

சில சமயங்களில் ஆற்றல் மிக்க செய்திகள் எளிமையான வார்த்தைகளில் வெளிப்படுகிறது. ‘‘உங்கள் நன்மைக்காக அன்றி, கடவுள் வேறு எதையும் உங்கள் வாழ்வில் அனுமதிப்பதில்லை’’ வாழ்க்கை சோதனை நிறைந்தது, என்பதை நிக் மறுக்கவில்லை. உங்கள் வாழ்க்கையை எந்த வழியிலாவது அரவணைத்துக் கொண்டு, தேவையானவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

நிக் ஒரு தனிப்பிறவி. கடவுளின் கருவி. வரம்பையுடம் மீறி வாழ்கின்றவர். விடாமுயற்சியை செய்தியாக நமக்கு தருகிறார். நிக் தமது அழைப்பையும், பொறுப்புக்களையும் மற்றும் பணியையும் அரவணைத்துக் கொண்டார். ‘‘உங்களை நம்புகின்ற ஒருவர் இருக்கிறார், நீங்கள் இருக்கும் நிலையிலேயே அன்பு செய்கிறார், என்ற தெளிவான எண்ணம் உங்களுக்கு உண்டு.

சிந்தனைக்கு

- நிக் வாழ்க்கை கதையில் உங்கள் மனதைத் தொட்ட இரண்டு கருத்தினைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
- வேலையிடத்தில், அக்கம்பக்கத்தில், குடும்பத்தில் எவ்வாறு நீங்கள் எதிர்நோக்கு அளிக்கும் ஒருவராக இருந்த அனுபவத்தை பகிர்ந்துக் கொள்ளவும்.

## உணர்வு

வாசகம் : 2 திமொத் 2 : 13 -17

1. தூய ஆவியாரை நோக்கி செபியுங்கள்.

   (மனம் திறந்து இறை இயேசுவை சந்திக்கவும், அவரால் ஆட்கொள்ளப்பட்டு வல்லமைப்பெற)

2. வாசகப் பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும்.

(ஓவியங்கள், படங்கள், காணொளி, நாடக வடிவம் போன்றவைகளைப் பயன்படுத்தலாம்…..)

3. இறைவார்த்தையில் நிலைத்து அமைதியாக இருக்கவும்.
4. எந்த வார்த்தைகள், வசனங்கள் அல்லது கருத்துக்கள் என் மனதைத் தொட்டது?
5. தூய ஆவியானவர் கூறும் செய்தி என்ன அல்லது எனக்கு கூறும் செய்தி என்ன?

## செயல்கள்

a) சிறிய குழுவில் பகிர்ந்துக் கொள்ளவும் (3-4 பேர்கள்) மேலேயுள்ள 4+5-ம் எண் கேள்விகள் குறித்து.
b) பெரிய குழுவில் 2 அல்லது 3 கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
c) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் செய்யக்கூடிய ஓர் காரியத்தைத் தேர்வு செய்ய உதவ வேண்டும்.
d) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் தேர்வு செய்த காரியம் குறித்த விஷயங்களைக் சேகரிக்க உதவலாம். (மற்றவர்களுக்கு எதிர்நோக்கு அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். நடைமுறை படுத்தும் நாளை முடிவு செய்ய வேண்டும்).
e) செபிக்கும் நேரம் (தேர்வு செய்த காரியத்திற்காக செபிக்கவும்).

வழிநடத்துனரின் கவனத்திற்கு:

i) புத்தாக்க/ மாற்று வழி/ பங்கு கொள்ளும் வழியினைப் பயன்படுத்தலாம்.
ii) தலைப்பின் கருப்பொருள் மற்றும் உரையாடல் / உணர்வு பகுதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை மனதில் கொள்ளவும்.
iii) 4D (தடுத்தாட்க் கொள்ளப்பட்ட, வல்லமைப்பெற்ற, தெளிவுப்பெற்ற, மறைப்பரப்பு) ஆகியவற்றை நினைவிற்க் கொள்ளவும்.
iv) 3D (உரையாடல், உணர்வு, செயல்கள்) ஆகிய மூன்று பகுதிகளையும் பங்கெடுப்பாளர்களுக்கு அர்த்தமுள்ளதாக இருக்க விரிவாக ஆராயவும்.

இறுதிப்பாடல் (பொருத்தமான பாடலைத் தேர்வுச் செய்யவும்).

தீ.ம.மே.மா கருப்பொருள் (2017-2019): எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட கருப்பொருள் (2016-2020):

## திருச்சபை குடும்பங்களின் ஒன்றியம்

மார்ச் 2017 துணை கருப்பொருள்: எதிர்நோக்கம்:

## தேவையறிந்து பகிர்வதில் வாழ்வது

அறிமுகம்: விரைவாக மாறிவரும் காலகட்டத்தில் வாழ்கின்றோம். நான்கு சந்திப்பு சாலையில் நிற்க்கும் அனுபவத்தை அடிக்கடிப் பெறுகின்றோம். எனவே எதிர்நோக்கு உள்ள பாதையைத் தேர்வுச் செய்து, மற்றவர்களையும் கடவுளையும் அன்பு செய்ய புத்தாக்கச் சிந்தனையுடன் வாழ்வோம்.

ஆரம்பப்பாடல் (தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான பாடலைத் தேர்வுச் செய்யவும்).

## உரையாடல்

இருபத்து இரண்டு வயது யேவான்டா, தற்கொலைச் செய்துக் கொள்ளும் எண்ணத்துடன் ஆற்றுப்பால சுவரின் மேல் நின்று கொண்டிருந்தாள். டேமியன் என்ற வழிப்போக்கர் இதைக் கண்டு அருகில் சென்றார்.

டேமியன் : மேலே நின்று இயற்க்கை காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பது இதமானதுதான், ஆனால் ஆபத்தானது அல்லவா?

யேவான்டா : எனக்கு இங்கு எதுவும் அழகாக இல்லை. இங்கிருந்து போங்கள்!

டேமியன் : தயவுசெய்து கீழே இறங்கி வா, கொஞ்சம் பேசுவோம்.

யேவான்டா : நீங்கள் சொல்லப் போவது எதுவும் என் மனதை மற்றாது. என் வலியை இனிமேல் என்னால் தாங்க முடியாது.

டேமியன் : ஆனால், உன்மீது அக்கறையும் அன்பும் கொண்டுள்ள உன் குடும்பம் இருக்கிறது அல்லவா?

யேவான்டா : குடும்பம்??? ம்ம்ம்ம்.... என் குடும்பத்திற்கு என் மீது அன்பும் அக்கறையும் எதுவும் இல்லை.

டேமியன் : இங்கே பாருங்கள், வேறு பல வழிகள் உள்ளன. தயவுசெய்து கீழே இறங்கி வாருங்கள்?

யேவான்டா : எல்லா முயற்சிகளும் எடுத்தாச்சி....புகைபிடித்தல், மது, போதைப்பொருள் என்று எல்லா முயற்சியும் செய்து விட்டேன். வேதனை இன்னும் அதிகமாகி கொண்டுப் போனதுதான் மிச்சம்!

டேமியன் : உண்மைதான். எல்லா முயற்சிகளும் எடுத்தீர்கள். இன்னும் ஓர் வழியும் இருக்கிறது. இதையும் முயற்சி செய்து பாருங்கள். இறை வழி.

யேவான்டா : நீங்க சொல்வது எனக்கு எதுவும் புரியவில்லை!

டேமியன் : முதலில் கீழே இறங்கி வா! நான் தெளிவாக சொல்கிறேன். கடவுள் உன் மீது அளவற்ற அன்புக் கொண்டுள்ளார். இப்படி உன் உயிரை மாய்த்துக் கொள்ள அவர் விரும்பமாட்டார்.

யேவான்டா : என்னை போன்ற பொரும் பாவியை கடவுள் எப்படி அன்பு செய்வார்?

டேமியன் : இப்பவும் கடவுள் உன்னை அதிகமாக அன்பு செய்கிறார், அன்போடு உன்னைத் தேடுகிறார்.

யேவான்டா : (ஆழ்ந்த சிந்தனையுடன் அமைதியானாள்)

சற்று நேரம் அமைதியுடன் இருந்தாள். கீழே இறங்கி வர, டேமியன் அவளை அணைத்துக் கொண்டார்.

சிந்தனைக்கு:

- இவர்கள் இருவருக்கிடையே நடந்த உரையாடலின் போது, உங்களின் மனநிலை எப்படி இருந்தது?
- இப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள் எப்படி கையாண்டு இருப்பீர்கள்? அல்லது பாதிக்கப்பட்ட அனுபவம் உங்களுக்கு உண்டா? பகிர்ந்துக் கொள்ளவும்.

## உணர்வு

வாசகம் : எபேசியர் 1: 15-18

1. தூய ஆவியாரை நோக்கி செபியுங்கள்
   (மனம் திறந்து இறை இயேசுவை சந்திக்கவும், அவரால் ஆட்கொள்ளப்பட்டு வல்லமைப்பெற)
2. வாசகப் பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும்
   (ஓவியங்கள், படங்கள், காணொளி, நாடக வடிவில்....போன்றவைகளை பயன்படுத்தலாம்)
3. இறைவார்த்தையில் நிலைத்து அமைதியாக இருக்கவும்
4. எந்த வார்த்தைகள், வசனங்கள் அல்லது கருத்துக்கள் என் மனதைத் தொட்டது?
5. தூய ஆவியானவர் கூறும் செய்தி என்ன அல்லது எனக்கு கூறும் செய்தி என்ன?

## செயல்கள்

a) சிறிய குழுவில் பகிர்ந்துக் கொள்ளவும் (3-4 பேர்கள்) மேலேயுள்ள 4+5-ம் எண் கேள்விகள் குறித்து.
b) பெரிய குழுவில் 2 அல்லது 3 கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
c) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் செய்யக்கூடிய ஓர் காரியத்தைத் தேர்வு செய்ய உதவ வேண்டும்.
d) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் தேர்வு செய்த காரியம் குறித்த விஷயங்களைக் சேகரிக்க உதவலாம். (மற்றவர்களுக்கு எதிர் நோக்கு அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். நடைமுறை படுத்தும் நாளை முடிவு செய்ய வேண்டும்.)
e) செபிக்கும் நேரம் (தேர்வு செய்த காரியத்திற்காக செபிக்கவும்)

வழிநடத்துனரின் கவனத்திற்கு:

i) புத்தாக்க/ மாற்று வழி/ பங்கு கொள்ளும் வழியினைப் பயன்படுத்தலாம்.

ii) தலைப்பின் கருப்பொருள் மற்றும் உரையாடல் /உணர்வு பகுதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை மனதில் கொள்ளவும்.

iii) 4D (தடுத்தாட்க் கொள்ளப்பட்ட, வல்லமைப்பெற்ற, தெளிவுப்பெற்ற, மறைப்பரப்பு) ஆகியவற்றை நினைவிற்க் கொள்ளவும்.

iv) 3D (உரையாடல், உணர்வு, செயல்கள்) ஆகிய மூன்று பகுதிகளையும் பங்கெடுப்பாளர்களுக்கு அர்த்தமுள்ளதாக இருக்க விரிவாக ஆராயவும்).

இறுதிப்பாடல் (பொருத்தமான பாடலைத் தேர்வுச் செய்யவும்).

தீ.ம.மே.மா கருப்பொருள் (2017-2019): எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட கருப்பொருள் (2016-2020):

## திருச்சபை குடும்பங்களின் ஒன்றியம்

ஏப்ரல் 2017 துணை கருப்பொருள்: எதிர்நோக்கம்:

## கடவுளின் வாக்குறுதியைக் கொண்டாடுதல்

அறிமுகம்: [மீட்புக்காக] நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு, நம்மை நம்பிக்கையுடன் காத்திருக்க வைத்துள்ளது. 'நாமோ காணாத ஒன்றை எதிர்நோக்கி இருக்கும்போது அதற்காகத் தளரா மனத்தோடு காத்திருக்கின்றோம் (உரோ 8:25). கடவுள் நம்மை தம் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

## உரையாடல்

வரலாற்றில் படைப்புகளின் முழுமையாகவும் நிறைவாழ்வு குறித்த மனித குலத்தின் ஏக்கத்தின் நிறைவாக, இயேசு அறிவிக்கப்பட்டுள்ளார். அவரின் உண்மையான சமய மற்றும் கலாச்சார பண்பாடுகள், உதாரணத்திற்கு இரக்கம், இறை சித்தத்திற்கு அடிபணிதல், கருணை, நேர்மை, அகிம்சை, நீதியின்பால் தாகம், பாசம் மற்றும் படைப்புகள் அனைத்திடமும் கொண்டுள்ள நல்லிணக்கம் என அனைத்தும் கிறிஸ்துவில் முழுமைப் பெறுவதைக் காண்கின்றனர். இயேசு அனைத்துலக நடுநிலையானவர். அவரில் விசுவாசம் கொள்ளாதவர்களுக்கும் அவரே நடுநிலையினராக உள்ளார். தூய ஆவியானவர் வழியாக, இயேசு கிறிஸ்துவிடமிருந்து மீட்பு அருளைப் பெறுகின்றோம்.

இயேசு மெய்யான இறைவன். மெய்யான மனிதன் என நம்புகிறோம். அவரே மீட்பர், காரணம் தந்தையின் அனைத்துலக மீட்புத் திட்டத்தை நிறைவேற்றினார். அவர் சிறப்பானவர். இந்த சிறப்பே அவருக்கு அனைத்துலக அங்கிகாரத்தை வழங்கியுள்ளது, தொடர்ந்து வரலாற்றின் மையமாகவும் இலக்காகவும் உள்ளார். மனித நிலையிலுள்ள இயேசுவை தியானிக்கும் போது, நம் மக்கள் பல கேள்விகளுக்கு விடை காண்கின்றனர். எதிர்நோக்குதல் நிறைவேற்றப்படுகிறது. அவர்களின் மாண்பு உயர்த்தப்படுகிறது. ஏமாற்றங்கள் தகர்க்கப்படுகிறது. மனித படைப்பின் நோக்கத்தைத் தேடி அலையும் அனைவருக்கும், மனித இனத்திற்கே எல்லா காலங்களிலும் இயேசுவே நற்செய்தி.

(Church in Asia in the 3rd Millennium, Guide book on the Apostolic Exhortation Ecclesia in Asia, article 14, p.17)

சிந்தனைக்கு:

- ‘‘கிறிஸ்துவால் அனைத்தும் நிறைவேறிற்று’’ எனும் வரிகளிலிருந்து நீங்கள் புரிந்துக்கொள்வது என்ன?
- உங்களின் எதிர்நோக்கங்களும் / விருப்பங்களும் எவ்வாறு கிறிஸ்துவில் நிறைவேற்றியிருக்கிறது என்று பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

## உணர்வு

வாசகம் : **உரோ 8 : 19 - 25**

1) தூய ஆவியாரை நோக்கி செபியுங்கள்.
   (மனம் திறந்து இறை இயேசுவை சந்திக்கவும், அவரால் ஆட்கொள்ளப்பட்டு வல்லமைப்பெற)
2) வாசகப் பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும்.
   (ஓவியங்கள், படங்கள், காணொளி, நாடக வடிவம் போன்றவைகளைப் பயன்படுத்தலாம்…..)
3) இறைவார்த்தையில் நிலைத்து அமைதியாக இருக்கவும்.
4) எந்த வார்த்தைகள், வசனங்கள் அல்லது கருத்துக்கள் என் மனதைத் தொட்டது?
5) தூய ஆவியானவர் கூறும் செய்தி என்ன அல்லது எனக்கு கூறும் செய்தி என்ன?

## செயல்கள்

a) சிறிய குழுவில் பகிர்ந்துக் கொள்ளவும் (3-4 பேர்கள்) மேலேயுள்ள 4+5-ம் எண் கேள்விகள் குறித்து.
b) பெரிய குழுவில் 2 அல்லது 3 கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
c) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் செய்யக்கூடிய ஓர் காரியத்தைத் தேர்வு செய்ய உதவ வேண்டும்.
d) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் தேர்வு செய்த காரியம் குறித்த விஷயங்களைக் சேகரிக்க உதவலாம். (மற்றவர்களுக்கு எதிர்நோக்கு அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். நடைமுறை படுத்தும் நாளை முடிவு செய்ய வேண்டும்.
e) செபிக்கும் நேரம் (தேர்வு செய்த காரியத்திற்காக செபிக்கவும்)

வழிநடத்துனரின் கவனத்திற்கு:

v) புத்தாக்க/ மாற்று வழி/ பங்கு கொள்ளும் வழியினைப் பயன்படுத்தலாம்.
vi) தலைப்பின் கருப்பொருள் மற்றும் உரையாடல் /உணர்வு பகுதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை மனதில் கொள்ளவும்.
vii) 4D (தடுத்தாட்க் கொள்ளப்பட்ட, வல்லமைப்பெற்ற, தெளிவுப்பெற்ற, மறைப்பரப்பு) ஆகியவற்றை நினைவிற்க் கொள்ளவும்.
viii) 3D (உரையாடல், உணர்வு, செயல்கள்) ஆகிய மூன்று பகுதிகளையும் பங்கெடுப்பாளர்களுக்கு அர்த்தமுள்ளதாக இருக்க விரிவாக ஆராயவும்.

இறுதிப்பாடல் (பொருத்தமான பாடலைத் தேர்வுச் செய்யவும்).